## ஏப்ரல் - 6

**"ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்."**

**- 1பேது 4 : 16**

சத்தியத்திற்காக ஊழியஞ் செய்கிறதினால் நாம் அடைந்த வியாதியும், எந்தவிதமான அசௌகரியமும், நம்முடைய விசுவாசத்தின் சான்றுகளாகவும், அன்பின் சான்றுகளாகவும், நம்முடைய பிதாவினால் அனுமதிக்கப்படுகின்றன. ஏனென்றால், இப்படிப்பட்ட உபத்திரவங்களுக்கு ஆளாகாவிட்டால், அல்லது உடனே ஒரு அற்புதத்தினாலே அவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டால், கர்த்தருடைய வேலையில் நமக்கு ஒரு தியாகமும் இல்லாதிருக்கும். மேலும் சத்தியத்தின் நிமித்தமாக ஏற்படுகிறவைகளை சகிக்க நமக்குள்ள இஷ்டத்திற்கு சோதனை இல்லாதிருக்கும், ஆனபோதிலும் இருக்கிற பிரகாரமாக, சத்தியத்தின் நிமித்தமாக நாம் அடைகிற ஒவ்வொரு நீடித்த வலி அல்லது நோய் அல்லது சரீரகாயம் அல்லது மனதின் காயம், சமுதாய ரீதியில் அல்லது சொல்லர்த்தப்படி சிரச்சேதம் பண்ணப்படுவோம். நமது உண்மையை நிரூபித்து ஆவியின் ஒரு சாட்சியாகிறது. மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலனாகிய பேதுருவும் சொல்லுகிற பிரகாரமாக, இந்த விதமான எல்லா உபத்திரவங்களிலும் நாம் மிகவும் சந்தோஷப்பட வேண்டும்.

**-Z '96, 166(R 2004).**

கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபடுவது எதைக் குறிக்கிறது என்றால், இயேசுவைப் போல ஒரே காரணத்துக்காக, ஒரே விதங்களில் ஒரே ஆவியில், ஒரே நோக்கங்களுக்காகவும், ஒரே பலன்களுடனும் பாடுபடுவதாகும். எவனாகிலும் கிருபை பெற்றவனாக இருந்தால், வெட்கப்படாமல், அதை ஒரு மானிட ஜீவிக்கு இருக்கக்கூடிய மிகவும் பெருமையான சலுகையாகவும், சந்தோஷப்படுவதற்கும், நன்றி செலுத்துவதற்கும் காரணமானதாகவும், எண்ண வேண்டும். அது அவனுக்கு பிதாவோடும், குமாரனோடும், பரிசுத்தவான்களோடுமுள்ள ஐக்கியத்தையும், சிறந்த சமாதானத்தையும் இந்த ஜீவியத்தின் சந்தோஷத்தையும் அவர்களுடைய குணங்களை உயர்வாக மதித்தலையும், ராஜ்ஜியத்துக்காக ஆயத்தத்தையும் இறுதியாக நமது அழைப்பின் பந்தயப் பொருளையும் கொடுக்கிறது.

**-P '33, 63.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

மத் 5:10-12; ரோம 8:35,36; 1கொரி 15:31,32; 2கொரி 1:5,9; 12:10; கலா 2:20; 6:17; பிலி 1:29; 3:10; எபி 10:32-34; யாக் 1:2,12; 1பேது 1:6,7; 2:19-24; 4:12-14; 5:1,10.

**கோபுர வாசிப்பு** : Z' 15, 297(R 5778).

**வினாக்கள் :** இந்த வசனத்தின்படி எனக்கு இந்த வாரத்தில் உண்டான அனுபவங்கள் எவை? அவை எப்படி என்னால் தாங்கிக் கொள்ளப்பட்டன? பலன்கள் எவை?